**புத்தளம் பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புத்தளம் பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான 02 வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 633,500 தொகையான வாகனமொன்று ரூபா 896,320 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 634,260 தொகையான செயற்பாடற்ற நிலையில் காணப்பட்ட இயந்திர உபகரண இருப்பொன்று நிலையான சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஈ) அரசியல்வாதிகள் நான்கு பேருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 153,101 தொகையான சொத்துக்களின் பெறுமதி தொடர்ச்சியாக நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் நிலையான சொத்துக்கள் அந்த அளவால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட 04 வருமான விடயங்களுக்குரியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,035,229 ஆக இருந்ததுடன் அதற்குரிய உபயோகப் பதிவேடுகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,476,446 ஆனமையால் ரூபா 558,783 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறவேண்டிய கணக்குகள்

i. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்குக் கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 94,384,860 ஆக இருந்ததுடன்

அந்தத் தொகையில் ஒரு வருட காலத்தை விஞ்சிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35,756,214 ஆகும்.

ii. மீளாய்வாண்டின் இறுதியில் பலவருட காலமாக அறவிடப்படாமல் காணப்படுகின்ற நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 918,287 ஆகும்.

iii. 2014 ஒக்தோபர் முதல் நிரந்தரமாக்கப்பட்ட பதவியணியினருக்கான ரூபா 17,573,101 தொகையான சம்பள மீளளிப்பொன்று 2017 மார்ச் மாதம் வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,124,826 கூட்டுத்தொகையினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

06 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 216,213,030 கூட்டுத்தொகையான சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீதியை உறுதிப்படுத்துவதற்கான போதியளவான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டில் அழிவடையச் செய்வதற்கும் ஏலமிடுவதற்கும் உத்தேசிக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானத்துடன் இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி அதிகாரச்சட்டம் | பலவருட காலமாக சேகரிக்கப்பட்ட ரூபா 946,880 தொகையான பெறுமதிசேர் வரித் தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,446,633 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,576,410 ஈக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

ரூபா 12,870,223 தொகையான நிதி விளைவின் அதிகரிப்புத் தொடர்பில் ஏனைய மிகைக்கட்டண பெறுவனவுகளின் அதிகரிப்பு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ. மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 42 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 21 மில்லியன் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

ஆ. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 3,079,434 தொகையான நிலுவை ஆதன வரிகளில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகவுள்ள ஆதன வரிகளின் பெறுமதி 93 சதவீதம் ஆகவும் ஏக்கர் வரிகளின் பெறுமதி 79 சதவீதம் ஆகவும் காணப்பட்டன.

இ. மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை கடை வாடகை ரூபா 242,797 ஆக இருந்தது.

### 2.3.2 ஆதன வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 3,780,035 தொகையான நிலுவை ஆதன வரிகளில் 01 வருடத்திற்கு மேற்பட்ட நிலுவையின் கூட்டுமொத்தம் ரூபா 3,079,434 ஆகும்.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனங்களைத் தடை செய்யும் நடைமுறைகளுக்கு அல்லது அது தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தேவையான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 வாடகை மற்றும் கடை வாடகை

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 4,198,205 மற்றும் ரூபா 242,797 தொகையான முறையே நிலுவை வாடகை மற்றும் நிலுவை கடை வாடகைகளில் 03 வருடங்களை விஞ்சிய வாடகை மற்றும் கடை வாடகை முறையே ரூபா 4,184,565 மற்றும் ரூபா 24,475 ஆக இருந்தன.

### 2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பழைய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 4,295,299 தொகை அறவிட வேண்டியிருந்தது. மாகாண பிரதம செயலாளரிடமிருந்து 2015 மே முதல் நவம்பர் வரையான காலத்திற்குரிய ரூபா 8,247,433 மற்றும் ரூபா 7,403,913 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

2016 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2009 முதல் 2013 வரையான காலத்திற்குரியதாக நபர்களுக்கும் 12 நிறுவனங்களுக்கும் சபைக்குச் சொந்தமான மோட்டார் கிரேடரை வாடகைக்கு வழங்கியதற்காக கூட்டுமொத்தமாக ரூபா 581,272 தொகை அறவிட வேண்டியிருந்தது. இந்த நிலுவைப் பணத்தை அறவிடுமாறு 2016 ஒக்தோபர் 13

ஆந் திகதிய மாகாண நிதிய கணக்குகள் செயற்குழுவினால் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மதுரங்குளி தொடுவாவ வீதி 17 ஆம் இலக்க கடையின் வாடகை செலுத்தாமல் புறக்கணித்ததால் கடையின் உரித்தை வாடகையாளர் உரித்தாக்கிக் கொள்வதற்கு புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கிற்கு சபை ஆஜராகியிருக்காததுடன் வாடகையாளருக்கு சார்பாகக் கிடைத்த தீர்ப்பிற்கு எதிரான விடயங்களைச் சமர்ப்பிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சபையில் அரசியல் அதிகாரத்தில் இருந்த இரண்டு முன்னாள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 152,845 தொகையான 06 தொலைபேசிகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சேவையை விட்டுச்சென்ற ஓய்வுபெற்ற, மரணமடைந்த மற்றும் வேலை நீக்கம் செய்யப்பட்ட போன்ற காரணங்களின் அடிப்படையில் கூட்டுமொத்தமாக ரூபா 602,151 தொகையான ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி ரூபா 8,252,999 தொகையான ''பினிசறு'' செயற்திட்டத்தில் ரூபா 602,320 தொகையான பாதுகாப்பு வேலி உரிய நியமத்தில் நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன் ரூபா 97,000 தொகையான குழாய்க் கிணறு நிர்மாணமும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ''பிளிசறு'' செயற்திட்டத்தின் நிர்மாணங்கள் தாமதமடைந்ததன் காரணமாக சபையினால் 2014 நவம்பர் மாதத்தின் போது உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருக்கும் போது 2016 மார்ச் மாதத்தில் ரூபா 300,000 முற்பணமொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் பின்னர் அத்தொகை பகுதிக் கொடுப்பனவாக பிழையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 3.4 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ரூபா 634,760 பெறுமதியான இயந்திர உபகரணங்களின் இருப்பொன்று செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது.

### 3.5 கழிவுப்பொருள் முகாமைத்துவம்

04 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட மற்றும் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்திற்காக ரூபா 3,178,632 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், நிர்மாணங்களைப் பூர்த்தி செய்யாமை மற்றும் இயந்திரங்களைப் பொருத்தாமை காரணமாக செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. சபை அதிகாரப்பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற 5 – 6 தொன் அளவான கழிவுப்பொருட்கள் சபைக்குச் சொந்தமான காணியில் திறந்த வெளியில் அகற்றப்படுகின்றமையால் சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதுடன் பொதுமக்களின் சுகாதாரத்திற்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது.

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 68 ஆக இருந்த போதிலும், தற்போது 100 பேர் சேவையில் ஈடுபட்டிருந்தனர். 04 இரண்டாம் நிலைப் பதவிகள் மற்றும் 03 ஆரம்ப நிலைப் பதவிகள் என்பவற்றில் வெற்றிடங்கள் ஏற்பட்டிருந்ததுடன் அமைய / சமயோசித பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட 13 பதவியணிகளுக்குப் புறம்பாக 13 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைத் தாபித்தல்

வடமேல் மாகாண பிரதம செயலாளரின் 2010 ஒக்தோபர் 05 ஆந் திகதிய வ/பிராலே/05/03/ கணக்காய்வு குழு என்ற கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வவ்போது எனது கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் பிரதேச சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) சொத்துக் கட்டுப்பாடு | சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) வருமான நிதியுதவி | உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்தும் வடமேல் மாகாண சபையிடமிருந்தும் உரிய நேரத்தில் நிதி மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) வருமானக் கட்டுப்பாடு | அறவிடவேண்டிய வருமானத்தை உரிய காலத்தில் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) கணக்கீடு | i. வருமானம் / செலவினங்கள் உரிய பிரகாரம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.<br>ii. தீர்மானப் புத்தகம் உரிய பிரகாரம் பேணப்படாமை<br>iii. முத்திரைக்கட்டணம், நீதிமன்றத் தண்டப்பணம், வாடகைக்கு வருமானம் போன்ற பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) வாகனக் கட்டுப்பாடு | வாகனப் பழுதுபார்த்தல் / எரிபொருள் விநியோகித்தல் உரிய பிரகாரம் ஒழுங்குமுறையாக மேற்கொள்ளப்படாமை. |
| (ஊ) கழிவுப்பொருள் முகாமைத்துவம் | கழிவுப்பொருள் மீள்சுழற்சி செய்யும் நிலைய நிர்மாணம் கைவிடப்பட்டுள்ள நிலையில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுப்பொருட்கள் சுற்றாடலுக்கு இசைவான முறையில் அகற்றப்படாமை. |